செய்தி வெளியீடு எண்: 01 நாள்: 02.03.2020

**தேனி மாவட்டம்,**
**பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெற்ற மையத்தினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

தேனி மாவட்டம், தேனி நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.03.2020) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, மாணவ, மாணவியர்களுக்கு வினாத்தாட்கள் வழங்கப்பட்ட நேரம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி, பாதுகாப்பு வசதி போன்ற அடிப்படை வசதிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மைய கண்காணிப்பாளர்களிடம் கேட்டறிந்ததோடு, தேர்வுமையங்களில் மந்தணக் கட்டுகள் உள்ள அறையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட பின் தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் உள்ள தேனி, பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய கல்வி மாவட்டங்களில் அரசு பொதுத்தேர்வான பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு (02.03.2020) இன்று முதல் (24.03.2020) அன்று வரை நடைபெறவுள்ளது. தேனி கல்வி மாவட்டத்தில் 5,945 மாணவ, மாணவியர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில், 5,689 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். 256 மாணவ, மாணவியர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

பெரியகுளம் கல்வி மாவட்டத்தில் 3,744 மாணவ, மாணவியர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில், 3,471 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். 273 மாணவ, மாணவியர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. உத்தமபாளையம் கல்வி மாவட்டத்தில் 5,077 மாணவ, மாணவியர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில், 4,782 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். 295 மாணவ, மாணவியர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

மேலும், தேனி, பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய கல்வி மாவட்டங்களில் தனித்தேர்வாளர்களில் 185 மாணவ, மாணவியர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில், 166 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். 19 மாணவ, மாணவியர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. ஆகமொத்தம் 14,951 மாணவ, மாணவியர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில், 14,108 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். 843 மாணவ, மாணவியர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

*தேனி மாவட்டத்தில் 138 பள்ளிகளுக்கு, 54 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு, தேர்வினை கண்காணித்திட 750 அறை கண்காணிப்பு அலுவலர்களும், 106 பறக்கும் படை (Flying Squad) அலுவலர்களும், இணை இயக்குநர் நிலையில் 7 நகரும் படையினரும் நியமிக்கப்பட்டு, கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*

*மேலும், தேர்வு கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் மந்தணக் கட்டுகளை கொண்டு செல்ல மீள விடைத்தாட்களை தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் சேகரிப்பு மையத்திற்கு கொண்டு செல்லும் வாகனங்களுக்கும், விடைத்தாட்களை சேகரிப்பு மையத்திலிருந்து விடைத்தாள் மதிப்பீட்டு மையத்திற்கு கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு காவலர்களும், விடைத்தாள் சேகரிப்பு மைத்திற்கு 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*

*தேர்வு நடைபெறும் நாட்களில் தேர்வு மையங்களுக்கு காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 03.00 மணி வரை தடையில்லா மின்சாரம், பேருந்து வசதியில்லா கிராமங்களிலிருந்து தேர்வு எழுதும் மாணக்கர்களின் நலன் கருதி போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.*

*ஆய்வின் போது, முதன்மைக்கல்வி அலுவலர் சே.ரேணுகாதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில்அண்ணா ஆகியோர் உடனிருந்தனர்.*

***வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***